அதிகாரிகளால், அதற்கான விண்ணப்பங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வட்டாட்சியர் ஆய்வு செய்ததற்குப் பின்னர், 325 விண்ணப்பங்களை அனுமதித்திருக்கிறார்கள். 54 விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டன. 145 விண்ணப்பங்கள் இன்னும் பல்வேறு காரணங்களுக்காகப் பரிசீலனையில் பல்வேறு கட்டங் களில் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை என்று ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவில் அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். தற்போது ரேசன் கார்டுகளுக்காக கணக்கெடுப் பதற்கும், அவைகளை விநியோகிப்பதற்கும் மற்றும் உள்ள பணிகளை அரசாங்க ஊழியர்களே செய்து வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், பல்வேறு அரசு அலுவலகங்களில் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. எனவே இந்த வேலையில்லா பட்டதாரி களை, அரசு அலுவலகங்களில் பயன்படுத்தி, ஏற்கனவே இருக்கும் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் அவர்களைப் பயன்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர் களைப் பொறுத்தவரையில் பயன்பெறுபவர்களுடைய மாத வருமானம் 50 ரூபாய்க்கு உள்ளாக இருக்கவேண்டும் என்று நாம் நிர்ணயித்து இருக்கிறோம். அதற்குள்ளாக வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும்.

முதுகுளத்தூரில் ஆதி திராவிட மாணவியர் விடுதி துவக்குவதற்கான கோரிக்கை

*129—வினா எண் 17393—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்க வேண்டுமென அப் பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். **விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) 1983–84-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ், அரசு துவக்கவுள்ள 10 புதிய விடுதிகளில் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் மாணவியர் விடுதியும் ஒன்றாகும்.

திரு. க. **பாரமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதகமான பதில் அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கண்மாயில் புதிய வடிகால் வெட்டும் திட்டம்

130—*வினா எண் 17382—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய் 560 அடி நீளமுள்ள தாம்போகி தண்ணீருக்குப் போக்கு இல்லாததால் புதிய வடிகால் வெட்டும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. **யா. சை. மு. யூசுப் :** (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றிய கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் இதற்கான ஒரு மதிப்பீடு ரூ. 25.70 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே ரூ. 25.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 'நீண்ட காலமாக இந்தத் திட்டம் நடைபெறாமல் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 5–12–1973-லே போடப்பட்டு அரசுக்கு வந்து இங்கே தேங்கிக் கிடக்கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு **யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளது. தற்போது கூடுதல் விவரங்கள் தேவைப்படுகின்ற காரணத்தினால், தல அதிகாரிகளிடம் இருந்து அந்த விவரங்கள் கோரப்பட்டு இருக்கின்றன. அந்தக் கூடுதல் விவரங்கள் வந்தவுடன், அதன் அடிப்படையில் அரசு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்யும்.